# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
## கலை கலாசார பீடம்
## மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டு சிறப்பு கலைமாணித் தேர்வு
## 2013 / 2014(August 2018)

# CRS 3243 Study of selected Religious Literature Adapted/Translated into Tamil

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி I இல் இருந்து ஏதேனும் மூன்று வினாக்களுக்கும் பகுதி II இல் இருந்து ஏதேனும் இரண்டு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி I

01. (அ) இயேசு காவியத்தின் உருவாக்கம், அதன் அமைப்பு முறை பற்றிச் சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

(ஆ) இயேசுவின் பிறப்புப் பற்றிய செய்திகள் மக்களை சென்றடைய வேண்டும் என்ற நோக்கில் கண்ணதாசன் கைக்கொண்ட உத்தி முறைகளைச் சுருக்கமாகத் தருக. (10 புள்ளிகள்)

02. (அ) இரட்சணிய யாத்திரிகத்தில் எச்.ஏ.கிருஸ்ணபிள்ளை எடுத்தாண்டுள்ள பாத்திரங்களின் இயல்புகளைச் சுருக்கமாகக் குறிப்பிடுக. (10 புள்ளிகள்)

(ஆ) இரட்சணிய யாத்திரிகத்தில் உண்மைக் கிறிஸ்தவனின் பக்தி வைராக்கியத்தினை வெளிப்படுத்தக்கூடிய எடுத்துக்காட்டுக்களை முன்வைக்குக. (10 புள்ளிகள்)

03. (அ) ஆசிய ஜோதி வெளிப்படுத்துகின்ற பௌத்தசமய தத்துவ சிந்தனைகளைச் சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

(ஆ) "புத்தரும் மகனை இழந்த தாயும்" என்ற பாடற் பகுதியில் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்ற புத்தரின் போதனையை தகுந்த எடுத்துக்காட்டுகளின் துணைகொண்டு விளக்குக. (10 புள்ளிகள்)

04. (அ) சைவ சித்தாந்தம் குறிப்பிடுகின்ற முப்பொருள் சிந்தனையினை சுருக்கமாகக் குறிப்பிடுக. (10 புள்ளிகள்)

(ஆ) கந்தபுராணத்தில் யுத்த காண்டப்பகுதியில் இத்தகைய முப்பொருள் சிந்தனை எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது எனச் சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

## பகுதி II

05. வாழ்வு நிலையாமை குறித்து உமர்கையாம் அவர்களின் சிந்தனைகளை அவருடைய பாடல்களை ஆதாரமாகக் கொண்டு எடுத்துக் காட்டுக.

(20 புள்ளிகள்)

06. திருவிவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்ற இயேசுவின் மலைப்பிரசங்க உரையை கண்ணதாசன் தன்னுடைய இயேசு காவியத்தில் எவ்வாறு இலகுபடுத்தியுள்ளார் என்பதனை ஆராய்க.

(20 புள்ளிகள்)

07. ஆசிய ஜோதியின் அருளுரிமை, கருணைக்கடல் ஆகிய பாடற்பகுதிகளில் புத்தரின் கொல்லாமை பற்றிய சிந்தனைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்குமாற்றினை விளக்குக.

(20 புள்ளிகள்)